[9th September 1959

SRI K. ANBAZHAGAN : இம்மாதிரி விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டிருப்பதின் காரணம், இப்போது வசூல் செய்யும் தொகையைவிட, இதை வசூல் செய்வதற்கு அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்ற நோக்கத்தால் தான் இதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று நகராட்சி மன்றத்தார் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே ஏழை மக்களுக்கு உதவி செய்யும் முறையில் நகராட்சி மன்றத்தார் கேட்டிருக்கும் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அவர்கள் கொடுத்திருக்கின்ற மனுவில் இவ்விதமான விளக்கம் ஒன்றும் காணப்பட வில்லை.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the Corporation has already lost Rs. 3 lakhs by way of cycle tax and hence will the Government consider not to give this exemption also?

MR. SPEAKER : The hon. Member is giving information. I rule the question out of order.

Finger Print System

*243 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ராஜ்ய போலீஸ் விரல் முத்திரைப் பிரிவுபற்றி விளக்குவதற்கு செஞ்சிலுவைப் பொருட்காட்சி, தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சிகளில் ஸ்டால்கள் ஏற்படுத்தப்பட்டனவா ?

(ஆ) அந்த முறையை அரசாங்கம் எல்லா முக்கிய நகரங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

(இ) எப்போது ?

(ஈ) இந்த ராஜ்யத்தில் விரல் முத்திரைப் பரிசோதக நிபுணர்கள் போதிய அளவு உள்ளனரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Finger Print System is already in force in all the districts of this State.

(*c*) Does not arise.

(*d*) The present strength in the Finger Print Bureau, Vellore, is not sufficient to cope with the work arising in the State.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த விரல் முத்திரையிலிருந்து திருடர்களை எப்படிக் கண்டு பிடிக்கலாம் என்பதைப்பற்றி காங்கிரஸ் எக்ஸிபிஷனில் காட்டப்பட்டதாகத் தெரிகிறது. இவ்விதம் காட்டப்படுவதால் அசல் திருடர்கள் இனிமேல் உஷாராக இருந்துகொள்ளமாட்டார்களா, அப்படியானால் இதை ஏன் எக்ஸிபிஷனில் காட்ட வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருடர்களிடம் பலவிதமான ஆற்றல் இருக்கலாம். ஆனால் "விரல் பதிவு" (பிங்கர் பிரிண்ட்) என்பது அவர்களையும் அறியாமல் ஏற்படுவது. அவ்விதம் கை படாமலே திருடக்கூடிய ஆற்றல் பெற்றால்தான் இது உபயோகமில்லாமல் போகும். ஆகவே இம்மாதிரி உள்ள காட்சிகளை எக்ஸிபிஷனில் காட்டுவதில் ஒரு தவறும் இல்லை. இது காங்கிரஸ் எக்ஸிபிஷனில் மட்டும் காண்பிக்கப்படவில்லை, ரெட் கிராஸ் எக்ஸிபிஷனிலும் காட்டப்பட்டது.

9th September 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Have the Government received any reports from the Judiciary that this system is not working satisfactorily?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information. On the other hand, the information I have is that it is appreciated all round.

SRI K. B. S. MANI : இம்மாதிரி கைரேகைகளைக் கொண்டும் மோப்ப நாய்களைக் கொண்டும் கண்டுபிடிக்கப்படும் திருட்டுகளை இன்னும் நல்ல முறையில் கண்டு பிடிப்பதற்காக இங்குள்ள போலீஸ் அதிகாரிகள் ஸ்காட்லாண்டு போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்களா ? அப்படி இல்லையானால் அவர்களை அங்கே அனுப்ப அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை இன்னும் தெரிந்து கொள்வதற்கு இவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. நமது பிங்கெர் ப்ரின்ட் யூனிட்ஸ் திறமையானவை. அவைகளில் நல்ல நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் வசதிகள் அளிக்க வேண்டும் ; அவ்வளவுதான்.

Uranium

* 244 *Q*.—SRI A. A RASHEED
SRI P. G. MANICKAM
SRI N. K. PALANISAMI
SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Uranium deposits are found in Tiruchengode in the Salem district; and

(*b*) if so, the steps taken to exploit them?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Radio activity was first recorded in the surface rocks in the Kullampatti area at the foot of Suryamalai hills in Tiruchengode taluk of Salem district.

(*b*) A considerable amount of detailed geological work is necessary before underground drilling can be undertaken. The investigations so far carried out indicate that drilling would be justified and it is therefore proposed to start drilling operations shortly. Unless a certain amount of drilling and development work is done, it is premature to assess the quantity and quality of the ore from the deposit.

SRI A. A. RASHEED : Will the mining be entrusted to the public sector or private sector, once the Government see that it proves to be fruitful?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a far-fetched question. But I may inform the hon. Member that the mineral is atomic energy mineral and therefore, it has to be necessarily in public sector.